சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலத்துறை- வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-2023 - முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் – 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.87.10 கோடி நிதியில் செயல்படுத்துதல் – மாநில நிதி ரூ.45.75 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – பிற திட்ட நிதி ரூ.41.35 கோடியினை பயன்படுத்த அனுமதி – வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தல் - ஆணை- வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வஇபதி) துறை

அரசாணை (நிலை) எண். 248 நாள்: 19.10.2022

திருவள்ளுவர் ஆண்டு, 2053

சுபகிருது, ஐப்பசி 2-ஆம் நாள்

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண் 207, வேளாண்மை-உழவர் நலத் (வஇபதி) துறை நாள் 23.11.2021.
2. மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 2022-2023-ஆம் நிதியாண்டிற்கான வேளாண் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு எண்.2
3. வேளாண்மை இயக்குநரின் கடிதம் எண். மாபதி2/62261/2022, நாள் 13.06.2022, 24.06.2022, 26.07.2022 மற்றும் 29.07.2022.

---

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2021-2022 ஆம் நிதி ஆண்டில் 3 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 3 இலட்சம் எக்டர் மானாவாரி நிலத்தை உள்ளடக்கி "முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தினை" (CMDDM) செயல்படுத்திட ரூ. 146.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

(கு.பி.பா)

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான வேளாண் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை – உழவர்நலத்துறை அமைச்சர் அவர்களால், கீழ்க்காணும் அறிவிப்பு அறிவிக்கப்பட்டது:-

"நிலத்தடி நீர் இல்லாத நிலங்களுக்கு, விண்ணின் மழைத் துளியும், உழவனின் வியர்வைத் துளியுமே, பயிர்களுக்கு உயிர்த் துளி. வறண்ட நிலங்களிலும் வளமான பயிர்கள் வளர அவற்றைப் பேணும் உழவர்களின் வயிறு குளிர செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் 132 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏழு இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மூன்று ஆயிரம் மானாவாரி நிலத் தொகுப்புகள் உருவாக்கப்படும். இதன் மூலம் மூன்று இலட்சம் மானாவாரி விவசாயிகளின் வருமானமும் வாழ்வாதாரமும் உயர்ந்திடும். வேளாண் இடுபொருட்களும் விதைகளும் மானியத்தில் வழங்கப்படும். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தால் பயன்பெறும் கிராமங்களுக்கு முன்னுரிமை அளித்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்".

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் வேளாண்மை இயக்குநர் அவர்கள் 2022-2023 ஆம் நிதியாண்டில் "முதலமைச்சரின் மானாவாரி நிலமேம்பாட்டு இயக்கத்தினை" செயல்படுத்தும்பொருட்டு கீழ்க்காணும் இனங்களுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும், இத்திட்டச் செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்:-

<u>முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தினை செயல்படுத்துவதற்கான திட்டக்கூறுகள் மற்றும் நிதித்தேவை விவரங்கள்:-</u>

i. <u>தொகுப்பு மேம்பாட்டு குழுவால் மேற்கொள்ளப்படும் அடிப்படை புள்ளி விவர கணக்கெடுப்பு:</u>

வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்களைக் கொண்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் உருவாக்கப்படும் தொகுப்பு மேம்பாட்டுக் குழுவானது (Cluster Development Team) ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துக்கும் சென்று, பதிவேடுகளை ஆய்வு செய்து, விவசாயிகளுடன் கலந்துரையாடுவதுடன், தேவையான விவரங்களைக் கண்டறிந்து, அடிப்படைப்புள்ளி விவர கணக்கெடுப்பை நடத்துவதற்கும், விவரங்களை ஆவணப்படுத்துவதற்கும், ஒரு தொகுப்பிற்கு ரூ.1000/- வீதம் 3000 மானாவாரி நிலத் தொகுப்புகளுக்கு ரூ30 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்குமாறும்,

ii. கிராம அளவிலான உழவர் குழுக்கள் உருவாக்கம்:

ஒவ்வொரு 3 முதல் 4 மானாவாரி நிலத் தொகுப்புகளுக்கு ஒன்று என, மொத்தம் 900 உழவர் குழுக்கள் உருவாக்கப்படும். மாதாந்திர கூட்டங்கள், ஆவணங்கள் பராமரித்தல் மற்றும் பிற தற்செயல் நிகழ்வுகளை நடத்துவதற்காக, ஒவ்வொரு உழவர் குழுவிற்கும் ரூ.10,000/- வீதம் ரூ. 90.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்குமாறும்,

iii. மானாவாரி விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

மானாவாரி விவசாயம் தொடர்பான தொழில்நுட்ப தகவல்களை நன்கு புரிந்துகொண்டு, தங்கள் வயல்களில் பின்பற்றுவதற்கும், அதன் மூலம் பண்ணை வருவாயை அதிகரிப்பதற்கும் விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். எனவே, 2022-2023 ஆம் ஆண்டில் ஒரு மானாவாரி நில தொழில்நுட்பப் பயிற்சிக்கு ஒரு தொகுப்புக்கு 40 விவசாயிகள் வீதம் 1.2 லட்சம் விவசாயிகளுக்கு (ஒரு விவசாயிக்கு ரூ.250/- வீதம்) பயிற்சி அளிப்பதற்காக, ATMA – SSEPERS திட்டத்திற்கு அளிக்கப்படும் நிதியிலிருந்து ரூ.3 கோடி மதிப்பிலான திட்ட செயல்பாடுகளை இத்திட்டக்கூறிற்கு பயன்படுத்துவதற்கு (dovetail) அனுமதி வழங்குமாறும்,

iv. கோடை உழவு / இலைவழித் தெளிப்பு இயற்கை உரம்:

மழைக்காலம் தொடங்கும்முன், தேர்ந்தெடுக்கப்பட்ட மானாவாரி நில விவசாயிகளின் ஒவ்வொரு வயல்களிலும் மழைநீரை சேகரிக்கவும், மண் அரிப்பை தடுக்கும் வகையில் முகடுகளையும் சால்களையும் உருவாக்கவும் கோடை உழவு செய்யப்படும். மேலும், மானாவாரி சிறு குறு விவசாயிகளுக்கு சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பழங்கள், பூக்கள், காய்கறிகள் போன்ற பயிர்களுக்கு இலைவழி ஊட்டச்சத்து அளிக்கவும், நேரடியாக மண்ணில் இடும் இயற்கை இடுபொருட்கள், உயிரியல் இடுபொருட்கள் பயன்பாட்டை விவசாயிகளிடையே ஊக்குவிக்கும் நோக்கத்தில், விவசாயிகள் கோடை உழவு மானியம் அல்லது உயிரியல் இடுபொருட்கள் - இலைவழி இயற்கை உரத் தெளிப்பு மேற்கொள்வற்கு எக்டருக்கு ரூ.750 வரை வழங்கப்படவுள்ளது. 2.4 இலட்சம் எக்டர் பரப்பில் (மக்காச்சோளம் பணப்பயிராக பயிரிடப்படுவதால் 60,000 எக்டர் நீங்கலாக) இலைவழித் தெளிப்பு இயற்கை உரம் விநியோகிக்கப்படும். எனவே, இத்திட்டக் கூறுக்காக மொத்தம் ரூ.18.00 கோடியினை மாநில நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும்,

(த.பி.பா)

v. உழவியல் செயல்பாடுகள்

2022-2023 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள 3 இலட்சம் எக்டரில், உத்தேசமாக, 1.70 இலட்சம் எக்டர் சிறுதானியங்கள், 1 இலட்சம் எக்டர் பயறுவகை பயிர்கள், 0.20 இலட்சம் எக்டர் எண்ணெய் வித்துக்கள், 0.10 இலட்சம் எக்டர் பருத்தி போன்ற பயிர்களை சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான விதைகள், உயிர் உரங்கள் மற்றும் இதர இடுபொருட்கள் மானியத்தில் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :-

a. விதை விநியோகம்:

மானாவாரி நிலங்களில் சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், பருத்தி (பி.டி. பருத்தி தவிர) போன்ற பயிர்களை சாகுபடி செய்வதற்கு தரமான விதைகளை 50 சதவிகித மானியத்தில் விநியோகம் செய்வதற்காக ஆகும் செலவு மொத்தம் ரூ.23.00 கோடி என திட்டமிடப்பட்டுள்ளது. இதில், விதைகள் மற்றும் நடவுப்பொருட்களுக்கான துணை இயக்கத்தின் கீழ் (Sub-Mission on Seeds and Planting Materials – SMSP) உள்ள விதை கிராமத் திட்டத்திலிருந்து ரூ.8.25 கோடியும், தேசிய உணவுப் பாதுகாப்புத்திட்டத்திலிருந்து (National Food Security Mission – NFSM) ரூ.3.80 கோடியும், தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்திலிருந்து (National Agricultural Development Programme NADP) ரூ.0.50 கோடியும் ஆக மொத்தம் பிற திட்ட நிதியிலிருந்து ரூ.12.55 கோடி மதிப்பிலான திட்ட செயல்பாடுகளை இத்திட்டக்கூறிற்கு பயன்படுத்துவதற்கு (dovetail) அனுமதி வழங்குமாறும், மீதமுள்ள ரூ.10.45 கோடியினை மாநில நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும்,

b. உயிர் உரங்கள் :

விவசாயிகளுக்கு அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போபாக்டீரியம், மைக்கோரைசா போன்ற உயிர் உரங்களை 50 சதவிகித மானியத்தில் ஒரு எக்டருக்கு ரூ.150 என்ற மானிய விகிதத்தில், எக்டருக்கு 10 பாக்கெட்டுகள் திட வடிவிலான உயிர் உரங்கள் அல்லது ஒரு லிட்டர் திரவ வடிவிலான உயிர் உரங்கள் (500 மிலி அசோஸ்பைரில்லம் அல்லது ரைசோபியம் + 500 மில்லி பாஸ்போபாக்டீரியம்) மூன்று இலட்சம் எக்டர் பரப்பில் விநியோகிக்க ரூ. 4.50 கோடியினை மாநில நிதியிலிருந்து ஒப்பளிப்பு வழங்குமாறும்,

c. இயற்கை இடுபொருட்கள் :

நச்சுத்தன்மையற்ற, மாசுபடுத்தாத, மனிதர்கள், விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு ஆபத்து விளைவிக்காத சிவப்பு கடல் பாசி ஜெல் எனும் இயற்கை

உயிர் இடுபொருளை எண்ணெய்வித்துக்கள் தவிர இதர மானாவாரிப் பயிர்களுக்கு எக்டருக்கு 5 கிலோ வீதம் மொத்தம் 80,000 எக்டர் பரப்பிற்கு (எக்டருக்கு ரூ.1250/- வீதம்) விநியோகிக்க ரூ. 10 கோடியினை மாநில நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும்,

d. <u>ஜிப்சம் பயன்பாட்டை ஊக்குவித்தல்</u> :

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க மானாவாரி விவசாயிகளுக்கு எக்டருக்கு 400 கிலோ ஜிப்சம் வீதம் 50 சதவிகித மானியத்தில் அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.800/- வீதம் (ஜிஎஸ்டி உட்பட) 20,000 எக்டருக்கு ஜிப்சம் விநியோகிக்க ரூ. 1.60 கோடியினை மாநில நிதியிலிருந்து ஒப்பளிப்பு வழங்குமாறும்,

| இனங்கள் | நிதி தேவை (ரூ. கோடி) | நிதி ஆதாரம் (ரூ. கோடி) | |
|---|---|---|---|
| | | மாநில நிதி | ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் பங்கேற்கும் திட்ட நிதி |
| உழவியல் செயல்பாடுகள் | | | |
| i. விதை விநியோகம் @ 50% மானியம் (Bt. பருத்தி மற்றும் தீவன சோளம் நீங்கலாக) | 23.00 | 10.45 | 12.55 (NFSM, NADP, Seed village under SMSP) |
| ii. உயிர் உரங்கள் விநியோகம் (50% மானியம்) @ எக்டருக்கு ரூ.150/- வீதம் 3,00,000 எக்டருக்கு | 4.50 | 4.50 | 0.00 |
| iii.சிவப்பு கடல் பாசி ஜெல் விநியோகம் @ எக்டருக்கு ரூ.1250/- வீதம் 80,000 எக்டருக்கு | 10.00 | 10.00 | 0.00 |
| iv. ஜிப்சம் விநியோகம் 50% மானியம் @ எக்டருக்கு ரூ.800/-வீதம் 20,000 எக்டருக்கு | 1.60 | 1.60 | 0.00 |
| மொத்தம் | 39.10 | 26.55 | 12.55 |

**vi. <u>உயர்மதிப்பு மரக்கன்றுகளை மானாவாரி நிலத்தில் நடுதல்:</u>**

மானாவாரி நில விவசாயிகளுக்கு நீண்ட கால அடிப்படையில் வருமானம் கிடைக்கும் வகையில் பயிர் சாகுபடியுடன், உயர் மதிப்புள்ள மரக்கன்றுகள் நடுவதற்கு (வரப்பு நடவாகவும், குறைந்த அடர்த்தி தோட்டமாகவும்) 2022-2023 ஆம் ஆண்டில் சுமார் 13.33 இலட்சம் மரக் கன்றுகளை இலவசமாக விநியோகிக்க மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் "தமிழ்நாடு விவசாய

(த.பி.பா)

நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கத்" (Tamil Nadu Mission for Sustainable Green Cover in Farm Lands TNMSGCF) திட்டத்தில் இருந்து ரூ.2.00 கோடி மதிப்பிலான திட்ட செயல்பாடுகளை இத்திட்டக்கூறிற்கு பயன்படுத்துவதற்கு (dovetail) அனுமதி வழங்குமாறும்,

vii. கிராம அளவிலான பண்ணை இயந்திர வாடகை மையம்

2022-2023 ஆம் ஆண்டில், 260 விவசாய குழுக்கள் மூலம், 260 கிராம அளவிலான பண்ணை இயந்திர வாடகை மையங்களை நிறுவுவதற்கு, வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கத்தின் கீழ் (Sub Mission on Agricultural Mechanization - SMAM) ஒரு மையத்திற்கு ரூ.8.00 இலட்சம் வீதம் வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கத்திற்கான (SMAM) நிதியில் இருந்து ரூ.20.80 கோடி மதிப்பிலான திட்ட செயல்பாடுகளை இத்திட்டக்கூறிற்கு பயன்படுத்துவதற்கு (dovetail) அனுமதி வழங்குமாறும்,

viii. மானாவாரி நில விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிர் இடுபொருட்கள் மற்றும் நாற்றுகள் வழங்கல்.

மானாவாரி நில விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், தகுந்த தொழில் நுட்பங்களுடன் கூடிய, பழங்கள், காய்கறிகளை பயிரிட தோட்டக்கலைப் பயிர்களின் இடுபொருட்கள் மற்றும் நாற்றுகளை மானாவாரி விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக, 2022-2023 ஆம் ஆண்டில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிதியிலிருந்து ரூ.3.00 கோடி மதிப்பிலான திட்ட செயல்பாடுகளை இத்திட்டக்கூறிற்கு பயன்படுத்துவதற்கு (dovetail) அனுமதி வழங்குமாறும் வேளாண்மை இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, 2022-2023 ஆம் நிதியாண்டில் முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தின் கீழ், மூன்று இலட்சம் மானாவாரி விவசாயிகள் பயனடையும் வகையில் மூன்று இலட்சம் எக்டர் பரப்பளவில் 3,000 மானாவாரி நில தொகுப்புகளை உருவாக்கி இத்திட்டத்தினை செயல்படுத்த தேவைப்படும் திட்டக் கூறுகளுக்கு கீழ்க்காணும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மொத்தம் ரூ.87.10 கோடி (ரூபாய் எண்பத்து ஏழு கோடியே பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அதாவது மாநில நிதியிலிருந்து ரூ.45.75 கோடியும் (ரூபாய் நாற்பத்து ஐந்து கோடியே எழுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) ஒன்றிய, மாநில அரசுகள் பங்கேற்கும் பிற திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூ.41.35 கோடி (ரூபாய் நாற்பத்தொரு கோடியே முப்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பிலான திட்ட செயல்பாடுகளை பயன்படுத்திட அனுமதியும்,

இணைப்பிலுள்ள இத்திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தும் அரசு ஆணையிடுகிறது.

**முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் - 2022-2023 இன வாரியான நிதி விவரம்**

| வ. எண் | இனங்கள் | அலகு | இலக்கு | மொத்த நிதி தேவை (ரூ.கோடியில்) | | | ஒன்றிணைக்கப்படும் திட்டங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மாநில நிதி | ஒன்றிய-மாநில அரசுகள் பங்கேற்கும் திட்ட நிதி | மொத்தம் | |
| அ) | வேளாண்மைத்துறை | | | | | | |
| 1 | அடிப்படை புள்ளி விவர கணக்கெடுப்பு | தொகுப்புக்கு ரூ.1000/- | 3,000 தொகுப்புகள் | 0.30 | - | 0.30 | - |
| 2 | உழவர் குழுக்கள் அமைப்பு | குழு ஒன்றுக்கு ரூ.10,000/- | 900 உழவர் குழுக்கள் | 0.90 | - | 0.90 | - |
| 3 | திறன் மேம்பாட்டுப் பயிற்சி | ஒரு விவசாயிக்கு ரூ.250/- | 1.2 இலட்சம் விவசாயிகள் @ 40 விவசாயி / தொகுப்பு | - | 3.00 | 3.00 | ATMA-SSEPERS |
| 4 | உழவு மானியம் / இலைவழித் தெளிப்பு இயற்கை உரம் | எக்டருக்கு ரூ.750/- | 2.4 இலட்சம் எக்டர் | 18.00 | - | 18.00 | - |
| 5 | உழவியல் செயல்பாடுகள் | | | | | | |
| | i. விதை விநியோகம் @ 50% மானியம் (Bt. பருத்தி மற்றும் தீவன சோளம் நீங்கலாக) | 50% மானியம் | 3,000 தொகுப்புகள் | 10.45 | 12.55 | 23.00 | NFSM (ரூ.3.8 கோடி), NADP (ரூ.0.50 கோடி), Seed village under SMSP (ரூ.8.25 கோடி) |
| | ii. உயிர் உரங்கள் விநியோகம் @ 50% மானியம் | எக்டருக்கு ரூ.150/- | 3 இலட்சம் எக்டர் | 4.50 | - | 4.50 | - |
| | iii. சிவப்பு கடல் பாசி ஜெல் விநியோகம் | எக்டருக்கு ரூ.1250/- | 80,000 எக்டர் | 10.00 | - | 10.00 | - |
| | iv. ஜிப்சம் விநியோகம் @ 50% மானியம் | எக்டருக்கு ரூ.800/- | 20,000 எக்டர் | 1.60 | - | 1.60 | - |
| 6 | பயன் தரும் மரக்கன்றுகள் விநியோகம் | எண்கள் | 13.33 லட்சம் | - | 2.00 | 2.00 | TNMSGCF-(SADS) |

(கு.பி.பா)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ) | வேளாண்மை பொறியியல் துறை | | | | | | |
| 7 | பண்ணை இயந்திர வாடகை மையங்கள் | மையத்திற்கு ரூ.8 இலட்சம் | 260 | - | 20.80 | 20.80 | SMAM |
| இ) | **தோட்டக்கலை (ம) மலைப் பயிர்கள் துறை** | | | | | | |
| 8 | தோட்டக்கலை பயிர் இடுபொருட்கள் மற்றும் நாற்றுகள் விநியோகம் | தொகுப்பு | 3000 | - | 3.00 | 3.00 | Schemes of DoH |
| | **மொத்தம்** | | | 45.75 | 41.35 | 87.10 | |

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட மாநில நிதியான ரூ. 45.75 கோடியினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

2401-00-பயிர் வளர்ப்பு – 800- ஏனைய செலவு - மாநில செலவினங்கள் – KL- நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம் .

| வ. எண் | விரிவான உப கணக்கு தலைப்பு | ஒதுக்கீடு செய்யப்படும் மாநில நிதி (ரூ.கோடி) |
|---|---|---|
| 1 | 309 உதவித் தொகை-03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (த.தொ.கு 2401 00 800 KL 309 03) | 1.20 |
| 2 | 311 மானியங்கள் - 01 தனித்திட்ட மானியம் (த.தொ.கு 2401 00 800 KL 311 01) | 44.55 |
| | **மொத்தம்** | **45.75** |

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை உரிய துறைத் தலைவர்/ அலுவலர்களுக்குப் பெற்று வழங்கிட வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இத்திட்ட இலக்கில் 80 சதவிகித இலக்கினை கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்திட வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 390/ADS (GKT)/2022, நாள் 10.10.2022 இல் ஒப்புதலைப் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>
இயக்குநர், வேளாண்மைத்துறை , சென்னை-5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மை பொறியியல் துறை, அண்ணாசாலை, சென்னை-35.
துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி மேம்பாட்டு முகமை, சென்னை-5.
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை-32.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
அரசு முதன்மைச்செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
இயக்குநர், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை, சென்னை.
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை-18.
முதன்மை மாநில கணக்காயர் (E&SSA), சென்னை-18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை-18.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை -9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.

(த.பி.பா)

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 9.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை -9.

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை -9.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை -9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.

நிதித் (வேளாண்-உழவர்நலன்) துறை, சென்னை-9.

வேளாண்மை – உழவர் நலத் (அனைத்துப்பிரிவுகள்) துறை, சென்னை -9,

உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத் துறை, சென்னை-9.

சம்மந்தப்பட்ட கோப்பு எண். 13795 /வஇபதி/2022.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

அரசாணை (நிலை) எண். 248, வேளாண்மை-உழவர் நலத் (வஇபதி) துறை,
நாள் : 19.10.2022

## இணைப்பு

### 2022-2023 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

தமிழ்நாடு தண்ணீர் பற்றாக்குறை உள்ள மாநிலங்களில் ஒன்றாகும். அகில இந்திய அளவில் தனிநபர் சராசரி நீர் இருப்பான 2200 கன மீட்டருடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் 750 கன மீட்டர் மட்டுமே நீர் இருப்பு இருக்கிறது. மானாவாரி பகுதிகளில் குறைந்த, சீரற்ற மழைப்பொழிவு மற்றும் உறுதியான நீர்ப்பாசன வசதிகள் இல்லாததால் பெரும்பாலும் மானாவாரி நிலங்களில் சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி பயிரிடப்படுகின்றன. சுமார் 40% உணவு தானியங்கள் மானாவாரி நிலத்தில் இருந்து பெறப்படுகிறது. அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக மானாவாரி விவசாயத்தையே நம்பியுள்ளனர். மேலும், தமிழகத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவம் போன்ற இரண்டு பருவங்களில் பரவலாக மழை கிடைக்கப் பெறுவதால் சோளம், கம்பு, மக்காச்சோளம், ராகி, தினை, சாமை, வரகு, குதிரைவாலி போன்ற சிறுதானிய பயிர்களும், உளுந்து, துவரை, பச்சைப்பயறு, கொள்ளு, கொண்டைக்கடலை, தட்டைபயறு போன்ற பயறு வகைகளும், நிலக்கடலை, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு போன்ற எண்ணெய் வித்து பயிர்களும், நார் பயிரான (Fibre Crops) பருத்தியும் முக்கியமாக மானாவாரியில் சாகுபடி செய்யப்படுகிறது.

மானாவாரி பயிர் சாகுபடியை, பாசன பயிர் சாகுபடியுடன் ஒப்பிடும்போது, இடுபொருள் பயன்பாடு குறைவாக இருப்பதால், மகசூலும் எப்போதும் குறைவாகவே இருக்கும். இருப்பினும், நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவதன் மூலம் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனில் கணிசமான ஆதாயங்களை அடைய முடியும். மழை நீர் சேகரிப்பு உத்திகளை பின்பற்றுவதன் மூலம் மானாவாரி பகுதியில் பயிர் விளைச்சலில் திட்டவட்டமான தாக்கத்தை ஏற்படுத்த முடியும். எனவே, “முதலமைச்சரின் மானாவாரி நிலமேம்பாட்டு இயக்கத்தினை” 2022-2023 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படுவது அவசியமாகிறது.

#### திட்டத்தின் நோக்கங்கள்:

1. மூன்று லட்சம் மானாவாரி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக 100 எக்டர் மானாவாரி நிலங்களைக் கொண்ட 3,000

(த.பி.பா)

தொகுப்புகளை உருவாக்கி, மாநிலத்தில் 3 லட்சம் எக்டர் மானாவாரி நிலத்தை மேம்படுத்துதல்.

2. இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் இலக்கில் 80 சதவிகிதம் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தும் கிராம பஞ்சாயத்துகளில் உள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்துதல்.
3. சிவப்பு கடல்பாசி ஜெல், இலைவழித் தெளிப்பு இயற்கை உரம் போன்ற இயற்கை இடுபொருட்களை பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் ஊட்டச்சத்து நிலை, மண்ணின் கரிமப் பொருட்கள் மற்றும் நீர் பிடிப்புத் திறன் ஆகியவற்றை மேம்படுத்துதல்.
4. வறட்சியைத் தாங்கும் பயிர்களை குறிப்பாக சோளம், ராகி, கம்பு, தினை, குதிரைவாலி, சாமை, வரகு போன்ற சிறுதானிய பயிர்களை பயிரிட விவசாயிகளை ஊக்குவித்து, ஊட்டச் சத்து நிறைந்த, ஆரோக்கியமான சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்.
5. மானாவாரி விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரங்களை எளிதாகக் கிடைக்கச் செய்வதற்கும், கிராமப்புற வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும், பண்ணை வேலைப்பளு மற்றும் சாகுபடிச் செலவைக் குறைப்பதற்கும், விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறையைப் போக்குவதற்கும் பண்ணை இயந்திர வாடகை மையங்களை உருவாக்குதல்.
6. தோட்டக்கலைப்பயிர் இடுபொருட்கள் மற்றும் நாற்றுகளை விநியோகிப்பதன் மூலம் மானாவாரி நிலப்பகுதியில் கூடுதல் வாழ்வாதாரத்தை உருவாக்குதல்.
7. விவசாய நிலங்களில் மரக் கன்றுகளை நடவு செய்வதன் மூலம் மானாவாரி நிலப் பகுதியில் பசுமைப் பரப்பை அதிகரிப்பது மற்றும் கூடுதல் வாழ்வாதாரத்தை உருவாக்குதல்.

<u>உத்திகள்</u>

1. வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்களைக் கொண்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் தொகுப்பு மேம்பாட்டுக் குழு (Cluster Development Team) அமைத்தல்.
2. மானாவாரி பகுதி/ தரிசு நிலம் (தற்போதைய தரிசு நிலம் தவிர) கண்டறிதல். பாசன நிலம் / தோட்டக்கால் நிலம் தேர்வு செய்யக்கூடாது.
3. 100 எக்டர் மானாவாரி நிலங்களைத் தொகுத்து 3,000 மானாவாரி நில தொகுப்புகளை உருவாக்குதல்.
4. கிராம அளவில் உழவர் குழுக்களை உருவாக்குதல்.

5. மேம்படுத்தப்பட்ட மானாவாரிப் பயிர் உற்பத்தி தொழில்நுட்பங்கள், மதிப்பு கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் நுட்பங்கள் ஆகியவற்றில் விவசாயிகளின் திறனை மேம்படுத்துதல்.
6. கோடைகாலத்தில் பெய்யும் மழை நீரின் சேகரிப்பை அதிகரிக்கும் கோடை உழவினை ஊக்குவித்தல்.
7. இயற்கை இடுபொருட்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல், இது பயிர் மூலம் மண்ணின் ஊட்டச்சத்து உறிஞ்சுதலை அதிகரிப்பதோடு, நீர் தேக்கும் திறனையும் அதிகரிக்கும்.
8. தரமான விதைகள், உயிர் உரங்கள் மற்றும் இயற்கை இடுபொருட்களை மானிய விலையில் வழங்குதல்.
9. கிராம அளவில் பண்ணை இயந்திர வாடகை மையங்களை உருவாக்குதல்.
10. தேர்ந்தெடுக்கப்பட்ட மானாவாரி நில தொகுப்பு விவசாயிகளுக்கு தோட்டக்கலைப்பயிர் இடுபொருட்கள் மற்றும் நாற்றுகள் வழங்கல்.
11. தமிழ்நாடு விவசாய நிலங்களின் நீடித்த நிலையான பசுமை போர்வைக்கான இயக்கத்தின் கீழ் குறைந்த அடர்த்தியில் நடவு செய்தல் மற்றும் வரப்புப் பயிராக நடுவதற்கு உயர்மதிப்புள்ள மரக் கன்றுகளை வழங்குதல்.
12. சிறுதானியம், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி ஆகியவற்றில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை திறம்பட கட்டுப்படுத்தவும், கூடுதல் வருமானம் ஈட்டவும், ஊடுபயிர் மற்றும் வரப்புப் பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவர்.

<u>முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்க திட்டத்தைச் செயல்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள்:</u>

a. மாநிலத்தின் ஒட்டுமொத்த உணவு தானிய உற்பத்திக்கு பங்களிக்கும் மானாவாரி பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் அதிகரிக்கும்.
b. கிராமப்புற வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.
c. மாநிலத்தில் மானாவாரி சாகுபடி பரப்பு நிலைநிறுத்தப்படும்.
d. மூன்று லட்சம் மானாவாரி விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்த்தப்படும்.

<u>செயல்படுத்தும் மாவட்டங்கள்:</u>

"முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்" (CMDDM) 31 மாவட்டங்களில் (சென்னை, காஞ்சிபுரம், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி தவிர) செயல்படுத்தப்படும்.

தொகுப்பு மேம்பாட்டு குழு (Cluster Development Team - CDT) உருவாக்கம்:

i. சம்பந்தப்பட்ட வட்டாரத்தின் வேளாண் அலுவலர் / துணை வேளாண் அலுவலர் ஆகியோரை தொகுப்பு ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு தொகுப்பு மேம்பாட்டு குழு (CDT) உருவாக்கப்பட வேண்டும்.

ii. <u>CDT இல் உள்ள உறுப்பினர்கள்:-</u>

- வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்.
- வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் வேளாண் அலுவலர்கள்.
- தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறையின் தோட்டக்கலை அலுவலர்
- வேளாண்மைத் துறையின் உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் உதவி வேளாண்மை அலுவலர்கள்.
- சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்ட 3 முதல் 5 முன்னணி விவசாயிகள்.

<u>வட்டார அளவிலான குழு உருவாக்கம்:</u>

தொகுப்பு ஒருங்கிணைப்பாளராக வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், தோட்டக்கலை உதவி இயக்குநர், வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளருடன் ஒருங்கிணைந்து, தொகுப்புகளின் செயல்பாடுகளை வழிநடத்தி மேற்பார்வையிடுவர். ஒட்டுமொத்தமாக, மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின் கீழ் வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் வேளாண் பொறியியல் துறையின் செயற் பொறியாளர் (AED) இயக்கப் பகுதியில் உள்ள அனைத்து தொகுப்புகளின் செயல்பாடுகளையும் மேற்பார்வையிடுவார்கள்.

i. தொகுப்பு மேம்பாட்டு குழுவால் மேற்கொள்ளப்படும் அடிப்படை புள்ளி விவர கணக்கெடுப்பு:

<u>(a) . மானாவாரி நிலத் தொகுப்புகள் உருவாக்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்:</u>

1. 100 எக்டர் மானாவாரி நிலங்களை ஒன்று முதல் மூன்று கிராம பஞ்சாயத்துகளுக்குள் தொகுத்து 3,000 மானாவாரி நிலத் தொகுப்புகளை உருவாக்க வேண்டும்.

2. மானாவாரி நிலத் தொகுப்புகள்/தரிசு நிலத்தில் பயிரிடும் அனைத்து விவசாயிகளும் பயன்பெற தகுதியுடையவர்கள். பாசன நிலம்/ தோட்டக்கால் நிலம் தேர்வு செய்யக்கூடாது.
3. கிராம அளவில் உழவர் குழுக்களை உருவாக்குதல்.
4. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தும் கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து மொத்த இலக்கில் 80 சதவிகிதம் செயல்படுத்த வேண்டும்.
5. மொத்த எண்ணிக்கையான 3,000 தொகுப்புகளுக்குள் மாவட்ட வாரியான மானாவாரி தொகுப்புகளின் இலக்கை நிர்ணயிக்கவும், தேவையின்படி ஒரு மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டத்திற்கு இலக்கை மாற்றவும் வேளாண் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

c.வட்டார அளவிலான குழுக்கள் அமைப்பதற்கான வழிகாட்டுதல்கள் :

1. வட்டார அளவிலான குழுவின் ஒருங்கிணைப்பாளராக வட்டார வேளாண் உதவி இயக்குநர், தோட்டக்கலை உதவி இயக்குநர், வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற்பொறியாளர் மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் வேளாண் அலுவலர் இதன் உறுப்பினர்கள் ஆவார்கள்.
2. வட்டார அளவிலான குழு அந்தந்த தொகுப்பு மேம்பாட்டுக் குழுவின் செயல்பாடுகளை வழிகாட்டி மேற்பார்வையும் செய்ய வேண்டும்.

d.மாவட்ட அளவிலான குழு அமைப்பதற்கான வழிகாட்டுதல்கள் :

மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாவட்ட அளவிலான குழுவில் வேளாண்மை இணை இயக்குநர், வேளாண் துணை இயக்குநர்கள் (மாநிலத் திட்டம் மற்றும் மத்திய அரசுத்திட்டங்கள்), வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் வேளாண்மை துணை இயக்குநர், வேளாண்மை பொறியியல் துறையின் செயற்பொறியாளர், தோட்டக்கலை இணை / துணை இயக்குநர், இந்த இயக்கத்தின் தொகுப்புகளிலுள்ள அனைத்து செயல்பாடுகளை வழிகாட்டி மேற்பார்வை செய்வார்கள்.

e.அடிப்படை புள்ளி விவர கணக்கெடுப்புகான வழிகாட்டுதல்கள்

தொகுப்பு மேம்பாட்டு குழு (CDT) ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்கும் சென்று, பதிவேடுகளை ஆய்வு செய்து, விவசாயிகளுடன் கலந்துரையாடுவதுடன்,

(த.பி.பா)

கீழ்க்கண்ட விவரங்களைக் கண்டறிந்து, ஆவணப்படுத்துவதற்கான அடிப்படைப்புள்ளி விவர கணக்கெடுப்பை நடத்த வேண்டும்:-

- கிராம அளவில் விவசாயிகள் வாரியான மானாவாரி நிலத்தை அடையாளம் காணுதல்.
- விவசாயிகளை பிரிவு வாரியாக (பொது, SC & ST) (SF/MF/மற்றவர்கள்) பயனாளியாகக் கணக்கிடுதல்.
- மண்ணின் தற்போதைய ஊட்டச்சத்து நிலை.
- தற்போதைய பயிர் சாகுபடி முறைகள் பின்பற்றப்படும் நிலை.
- கிராமங்களில் பண்ணை இயந்திரங்கள் வாடகை மையங்கள் பற்றிய விவரங்கள்.
- சந்தைப்படுத்துவதற்கான வசதிகளின் தற்போதைய நிலை.

தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்புகளின் தற்போதைய நிலை மற்றும் அதன் தேவைகளை அடையாளம் கண்டு அடிப்படைப் புள்ளி விவரங்கள் ஆவணப்படுத்த வேண்டும். 3 பிரதிகள் தயாரிக்கப்பட்டு, ஒரு பிரதியை சம்மந்தப்பட்ட வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்திலும், 2 பிரதிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்திலும் வைக்கப்பட வேண்டும். அறிக்கையின் மென் நகல்களை (Softcopy) வேளாண்மை இயக்குநரகத்திற்கு அனுப்ப வேண்டும்.

**ii. கிராம அளவிலான உழவர் குழுக்கள் உருவாக்குவதற்கான வழிகாட்டுதல்கள்**

1. வேளாண்மை இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி, 3 முதல் 4 மானாவாரித் தொகுப்புகளை ஒருங்கிணைத்து ஓர் உழவர் குழு (மானாவாரி கிராம விவசாயிகளின் மேம்பாட்டுக் குழு) உருவாக்கப்பட வேண்டும்.
2. மானாவாரி நிலத் தொகுப்புகளின் அனைத்து விவசாயிகளும் உழவர் குழுவின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு உழவர் குழுவையும் தலைவர் மற்றும் செயலாளரால் பிரதிநிதித்துவப்படுத்தபட வேண்டும்.
4. உழவர் குழுக்கள், தொகுப்பு மேம்பாட்டுக் குழுவின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் செயல்பட வேண்டும்.
5. உழவர் குழுக்கள் ஒவ்வொரு மாதமும் கூடி, வேளாண்மை இயக்குநரால் தெரிவிக்கப்படும் நிகழ்ச்சி நிரலின்படி பல்வேறு பண்ணை நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து விவாதிக்க வேண்டும்.
6. கிராம சமுதாயக் கூடம்/ சுய உதவிக் குழுக் கட்டிடம்/ கிராமப் பஞ்சாயத்து சேவை மையங்கள் போன்ற இடங்களில் உழவர் குழுக் கூட்டங்கள் நடத்தப்படலாம். மேலும், கூட்டத்தில் விவாதிக்கப்படும் தீர்மானங்களை

சம்பந்தப்பட்ட உழவர் குழு செயலாளர் பதிவு செய்ய வேண்டும். உழவர் குழுவின் ஆவணங்கள் தலைவரின் பாதுகாப்பில் வைக்கப்பட வேண்டும். மாதத்திற்கு ஒருமுறை தொகுப்பு மேம்பாட்டு குழுவால் ஆய்வு செய்ய வேண்டும்.

7. தொகுப்பு மேம்பாட்டு குழு உறுப்பினர்கள் கூட்டங்களில் கலந்துகொண்டு, அடுத்த மாதம் மேற்கொள்ளப்பட வேண்டிய விவசாய நடவடிக்கைகள் மற்றும் வேறு ஏதேனும் உள்ளூர் பிரச்சனைகள் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாட வேண்டும்.
8. உழவர் குழுக்கள் பின்வரும் ஆவணங்களை பராமரிக்க வேண்டும்.
   - தீர்மானப் பதிவேடு
   - உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் கணினியில் மென்நகலில் (Softcopy) பராமரித்தல்.

iii. மானாவாரி விவசாயிகளுக்கு திறன் மேம்பாடு பயிற்சிக்கான வழிகாட்டுதல்கள்:

1. ஒவ்வொரு தொகுப்பிலும், 40 விவசாயிகளுக்கு தொகுப்பு மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களால் மேம்படுத்தப்பட்ட மானாவாரி தொழில்நுட்பங்கள் குறித்து மாவட்டத்திற்குள் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
2. பயிற்சிப் பாடத் திட்டத்தின் மென்நகல் வேளாண்மை இயக்குநரகம் / இயக்குநர், STAMIN மூலம் தெரிவிக்கப்படும்.
3. இந்தத் திட்டத்திற்கான நிதியானது ATMA - SSEPERS நிதியிலிருந்து ஒரு தொகுப்பிற்கு ரூ. 10,000 வீதம் பயன்படுத்தப்பட வேண்டும்.
4. கோவிட்-19 நோய்த் தடுப்புக்காக அரசின் விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி பயிற்சி நடத்தப்பட வேண்டும்.

<u>iv கோடை உழவு / இலைவழித் தெளிப்பு இயற்கை உரத்திற்கான வழிகாட்டுதல் :</u>

1. இந்த உதவியைப் பெறுவதற்கு தொகுப்பு மேம்பாட்டு குழு மூலம் FCMS எண்ணுடன் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட வேண்டும். கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து சிட்டா / அடங்கல் பெற வலியுறுத்தப்பட வேண்டியதில்லை.
2. சம்மந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்கள் தொகுப்புகளின் முழுப் பகுதியிலும் (100%) உழவுப் பணிகளைச் சரிபார்க்க வேண்டும். 30% பகுதி தொகுப்பு மேம்பாட்டு குழு மற்றும் 10 %, பகுதி வட்டார அளவிலான குழுவால் சரிபார்க்கப்பட வேண்டும்.

(த.பி.பா)

3. விவசாயிகளுக்கு எக்டருக்கு 1.5 லிட்டர் என்ற அளவில் இலைவழித் தெளிப்பு இயற்கை உரம் விநியோகம் செய்யப்பட வேண்டும்.
4. விவசாயிகள் கோடை உழவு/ இலைவழித் தெளிப்பு இயற்கை உர மானியமாக எக்டருக்கு ரூ.750 (GST உட்பட) பெறலாம்.
5. மேற்கூறிய இலைவழித் தெளிப்பு இயற்கை உரம் கொள்முதல் செய்வது தொடர்பாக, இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களை ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க (Tender) அழைப்பதற்கு பரிசீலிக்க வேண்டும்.
6. ஒப்பந்தப்புள்ளிக்கான வெளிப்படைத்தன்மை சட்டம் மற்றும் விதிகள் (Tender Transparency Act and Rules) 1998, 2000 மற்றும் 2012 ஆகியவற்றைப் பின்பற்றி கொள்முதல் செய்யப்பட வேண்டும் மற்றும் மாவட்ட அளவிலான வேளாண் இடுபொருள் கொள்முதல் குழுவினால் (DLAPC) அங்கீகரிக்கப்பட வேண்டும்.

v. விதை மற்றும் இடுபொருட்கள் வழங்குவதற்கான வழிகாட்டுதல்கள்:

மண் வகை, மழைப்பொழிவு, சமூகப் பொருளாதார நிலைமைகள் மற்றும் விவசாயிகளின் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பருத்தி பயிரிடுவதற்கான தொகுப்பு வாரியான பகுதிகளை தொகுப்பு மேம்பாட்டு குழு (CDT) மூலம் இறுதி செய்யப்பட வேண்டும். பிறகு, பின்வரும் செயல்பாடுகள், தொகுப்பு மேம்பாட்டு குழு (CDT) வினால் முன்மொழியப்பட வேண்டும்:

1. வறட்சியைத் தாங்கும், பாதகமான காலநிலையிலும் மகசூல் தரக்கூடிய, மிகவும் பொருத்தமான குறுகிய கால பயிர் இரகங்களைக் கண்டறிந்து, விதைகளை முன்கூட்டியே இருப்பு வைக்க வேண்டும்.
2. இடத்துக்கு ஏற்ற பொருத்தமான பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதை தொகுப்பு மேம்பாட்டு குழு (CDT) உறுதி செய்ய வேண்டும்.
3. பயிர் சாகுபடிக் காலத்தில் தொகுப்பு மேம்பாட்டு குழு (CDT) பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும்.
4. தேர்ந்தெடுக்கப்பட்ட மானாவாரித் தொகுப்புகளில் பயிர் உற்பத்தித்திறனை அதிகரிக்க மண் பரிசோதனை அடிப்படையிலான உரப் பயன்பாடு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை (INM), ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) போன்ற மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் பின்பற்றப்பட வேண்டும்.
5. பூச்சி மற்றும் நோய் தாக்குதலை திறம்பட கட்டுப்படுத்தி கூடுதல் வருமானம் ஈட்ட விவசாயிகளை வேளாண் காடு வளர்ப்பு, ஊடுபயிர் மற்றும் சிறு

தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பருத்தி பயிர்களை சாகுபடி செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

6. மானாவாரி தொகுப்புகளில் அனுமதிக்கப்படும் மானாவாரி பயிர்கள்:
   i. சிறு தானியங்கள்: ராகி, கம்பு தினை, சாமை, வரகு, குதிரைவாலி, சோளம், மக்காச்சோளம். (தீவன சோளம் நீங்கலாக)
   ii. பயறு வகைகள்: உளுந்து, துவரை, பச்சைப்பயறு, கொள்ளு, தட்டைப்பயறு மற்றும் கொண்டைக்கடலை போன்ற பயிர்கள்.
   iii. எண்ணெய்வித்து பயிர்கள்: நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு.
   iv. பருத்தி (Bt. பருத்தி நீங்கலாக)
7. இடுபொருட்களின் விநியோகம்: சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பருத்தியில் தரமான விதைகள், அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போபாக்டீரியம் போன்ற உயிர் உரங்கள் (Biofertilizers), சிவப்பு கடல்பாசி ஜெல் (*Kappahycus alvarezii*) மற்றும் ஜிப்சம் போன்ற இடுபொருட்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் (AEC) விநியோகிக்கப்பட வேண்டும்.
8. சிவப்பு கடல்பாசி ஜெல் கொள்முதல் செய்வது தொடர்பாக, ஒப்பந்தப்புள்ளிக்கான வெளிப்படைத்தன்மை சட்டம் மற்றும் விதிகள் (Tender Transparency Act and Rules) 1998, 2000 மற்றும் 2012 ஆகியவற்றின்படி ஒப்பந்தப்புள்ளி (Tender) அழைப்பதற்கு உற்பத்தியாளர்கள் பரிசீலிக்கப்பட வேண்டும்.
9. மானாவாரி தொகுப்புகளில் உள்ள விவசாயிகளுக்கு சிவப்பு கடல்பாசி ஜெல் விநியோகம் செய்வதற்கு ஒரு எக்டருக்கு ரூ.1,250 நிதியுதவி (இது ஜிஎஸ்டியையும் உள்ளடக்கியது) வழங்கப்படும்.

<u>மானிய விகிதம்:</u>

1. தரமான விதைகள், உயிர் உரங்கள் - அசோஸ்பைரில்லம், ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியம் மற்றும் ஜிப்சம் விநியோகிக்க 50% மானியத்தில் (ஜிஎஸ்டி உட்பட) அனுமதிக்கப்படுகிறது.
2. நடைமுறையில் உள்ள TANSEDA விதை விலைக் கொள்கை விகிதத்தின்படி விதை விலை கணக்கிடப்பட வேண்டும்.
3. இயற்கை இடுபொருட்களான சிவப்பு கடல்பாசி ஜெல் பயன்படுத்த எக்டருக்கு ரூ.1,250/-வழங்கலாம், இலைவழித் தெளிப்பு இயற்கை உரம் பயன்படுத்த எக்டருக்கு ரூ.750/- வழங்கலாம் (ஜிஎஸ்டி உட்பட).

(த.பி.பா)

**vi. உயர்மதிப்பு மரக் கன்றுகளை மானாவாரி நிலத்தில் நடுவதற்கான வழிமுறைகள்.**

1. இந்தத் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை பெறுவதற்கு மானாவாரி நிலத் தொகுப்பில் உள்ள விவசாயிகள் உழவன் செயலியில் பதிவு செய்து, தமிழ்நாடு நீடித்த நிலையான பசுமை போர்வைக்கான இயக்கத்தின் (TNMSGCF) மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
2. விவசாயிகள் விவசாய பயிர்களுடன் பின்வரும் இரண்டு வேளாண் காடுகள் மாதிரிகளை பின்பற்றுவதன் மூலம் மரம் வளர்ப்பை மேற்கொள்ளப்பட வேண்டும்.
   - வரப்பு ஓரங்களில் நடவு செய்தல்: பண்ணை நிலங்கள் அல்லது பண்ணைக் குட்டைகளின் எல்லைகளில் மரங்களின் இனத்தைப் பொறுத்து 2 முதல் 4 மீட்டர் இடைவெளியில் மரக்கன்றுகளை நடவு செய்யலாம்.
   - குறைந்த அடர்த்தி தோட்டம்: தற்போதுள்ள பயிர்களின் விளைச்சலைப் பாதிக்காமல் எக்டருக்கு 100 மரக்கன்றுகள் முதல் 500 மரக்கன்றுகள் வரை நடவு செய்யலாம்.
3. செம்மரம், மலைவேம்பு, வேங்கை, சந்தனம், ரோஸ்வுட், கடம்பு, மகாகோனி போன்ற உயர் இரக மரப் பயிர்களை ஊக்குவிக்க வேண்டும்.
4. இலந்தை, புளி, விலாம் மரம், வில்வம், மருதமரம், கொடுக்காபுளி, பூவரசு, புங்கன், தான்றிக்காய், பெருநெல்லி, இலுப்பை மற்றும் நாவல் போன்ற உள்ளூர் இரக மரவகைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.
5. மரக்கன்றுகள் குறைந்தபட்சம் 3 மாத வயதுடன், 25 செ.மீ உயரமும், 2 முதல் 3 செ.மீ தடிமன் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
6. மேலும், விவரங்களுக்கு, தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமை போர்வைக்கான இயக்கம் (TNMSGCF) வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும்.
7. தொகுப்பு மேம்பாட்டு குழுவால் மரக்கன்று நடவு செய்யப்பட்ட வயல்களை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

**vii. கிராம அளவிலான இயந்திர வாடகை மையங்களை அமைப்பதற்கான வழிமுறைகள்:**

1. கிராம அளவிலான இயந்திர வாடகை மையங்கள் (CHCs) விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் / விவசாயிகள் குழு / விவசாயிகள் உற்பத்தியாளர் குழுக்கள் (FPGs) / உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) மூலம் குறைந்தபட்சம் எட்டு உறுப்பினர்கள் கொண்ட மானாவாரி தொகுப்பில் உள்ள குறைந்த பண்ணை சக்தி உள்ள மாவட்டங்களில் முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத் திட்டத்தின் கீழ் உள்ள கிராமங்களில் அமைக்கப்படும்.

2. குறைந்த பண்ணை சக்தி உள்ள மாவட்டங்களில் இருந்து கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படும்.
3. வேளாண் இயந்திரமயமாக்கலுக்கான துணை இயக்கத்தின் (SMAM) வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை, திருச்சி மற்றும் திண்டுக்கல் போன்ற அதிக பண்ணை சக்தி உள்ள மூன்று மாவட்டங்களைத் தவிர, 2022-23 ஆம் ஆண்டில் திட்டம் செயல்படுத்தப்படும் பிற மாவட்டங்களில் ஒவ்வொரு 10 மானாவாரி விவசாயத் தொகுப்புகளுக்கு ஒரு கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையம் அனுமதிக்கப்பட உள்ளது.
4. இயந்திரமயமாக்கல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு, வேளாண்மை, கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலத்துறை, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம், புதுதில்லி, கடிதம் எண்.3-1/2015-M&T(I&P) தேதி:16.10.2018-இல் தெரிவித்துள்ளபடி, கிராம அளவிலான இயந்திர சேவை மையத்தால் வாங்கப்பட்ட ஒவ்வொரு விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கான மானியத்தைக் கணக்கிடுவதற்கு, வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் இணைப்பு-II-C ல் உள்ளவாறு இயந்திரத்தின் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட மானியத்திற்கான விலை அல்லது முகவரிடம் பேச்சுவார்த்தை மூலம் இறுதி செய்யப்பட்ட இயந்திரத்தின் விலையில் 40% இதில் எது மிகக் குறைவோ அதனுடைய இரண்டு மடங்கு தொகை, அதாவது 80%, மேலும், SMAM இன் இனம் 6-ல் உள்ள "தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்தில் திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.10 இலட்சத்தில் பண்ணை இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தலு"க்கு வழங்கப்படக் கூடிய அதிகபட்ச மானியமானது ஒவ்வொரு இயந்திரத்திற்கான மானியத்தினை கணக்கிட்டு அதன் கூட்டுத் தொகை அதிகபட்சமாக ரூ.8 இலட்சம் என்று கணக்கிடப்படுகிறது.
5. கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையத்தை அமைக்கும் பயனாளிகளான விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள், விவசாயிகள் சங்கம், விவசாயிகள் குழு, உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் / உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை தொகுப்பு மேம்பாட்டு குழு மற்றும் பயனாளிகள் குழுவின் தீர்மானம் பெற்று செயல்படுத்துவதற்கு பதிலாக வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் செயற்பொறியாளர்(வே.பொ) கூட்டாக இணைந்து தேர்ந்தெடுத்து செயல்படுத்த வேண்டும்.
6. இயந்திர சேவை மையம் நடத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் சங்கம் / விவசாயிகள் குழு / உழவர் உற்பத்தியாளர் குழுக்களில் உள்ள அலுவலகப் பொறுப்பாளர்களை தேர்ந்தெடுத்த பிறகு, சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.

(த.பி.பா)

7. இயந்திர வாடகை மையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட விவசாயிகள் குழுவானது கூட்டுப் பண்ணையத் திட்டம், நீடித்த மானாவாரி விவசாய இயக்கம் (MSDA), தமிழ்நாடு நிலைக்கத்தக்க மானாவாரி வளர்ச்சி இயக்கம் (TNMSDD), முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்(CMDDM) (2021-22) போன்ற திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் பயனடைந்திருக்கக் கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும்,
8. வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பல்வேறு மாதிரிகள் மற்றும் அவற்றின் அதிகபட்ச சில்லறை விலை (MRP) இணையதளத்தில் உற்பத்தியாளரால் பதிவிடப்படும். இதனையும் உற்பத்தியாளரால் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட முகவர்கள் மற்றும் அவர்களின் விற்பனை விலை ஆகியவற்றை வேளாண்மைப் பொறியியல் துறையால் அங்கீகரிக்கப்படுகிறது. முகவரின் விற்பனை விலையானது உற்பத்தியாளரின் அதிகபட்ச சில்லறை விலை (MRP) ஆகும். இதில் இயந்திரங்களின் அடிப்படை விலை, சரக்கு மற்றும் சேவை வரி (GST) மற்றும் போக்குவரத்து செலவு ஆகியவை அடங்கும்.
9. இயந்திர வாடகை மையத்தை நிறுவுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் கூட்டுறவு சங்கங்கள் / விவசாயிகள் சங்கம் / விவசாயிகள் குழு / உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் / உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை விலையின் விவரங்களை இணையதளத்தில் நேரடியாக பெறலாம். மேலும் தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை தேர்ந்தெடுப்பதற்காக, அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் அவர்களின் விற்பனை விலையை உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து பெறலாம்.
10. விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் / விவசாயிகள் சங்கம் / விவசாயிகள் குழு / உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் / உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு தங்களின் தொகுப்பிற்கேற்ப வேளாண்மைப் பொறியியல் துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்களின் எந்த வகையான தயாரிப்பு கள் மற்றும் மாதிரியையும் தேர்ந்தெடுக்கலாம்.
11. வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற்பொறியாளரிடம் (வே.பொ) விவசாயிகளின் கூட்டுறவு சங்கங்கள் / விவசாயிகள் சங்கம் / விவசாயிகள் குழு / உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் / உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் தங்களை தேர்வு செய்வதற்கான தகவல் கடிதத்தைப் பெற்ற பிறகு, அவர்கள் தாங்கள் வாங்க விரும்பும் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் விலையைக் குறைக்க முகவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம்.
12. விவசாயிகளின் கூட்டுறவு சங்கங்கள் / விவசாயிகள் சங்கம் / விவசாயிகள் குழு / உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் / உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் முகவருடன் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, வேளாண் இயந்திரங்கள் மற்றும்

கருவிகளின் விற்பனை விலைக்கான வரைவோலையினை (DD) வேளாண்மை பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளரால் (AE) அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர் / விநியோகஸ்தர்கள் பெயரில் மட்டுமே எடுக்க வேண்டும்.

13. உதவி செயற்பொறியாளரால் அடையாளம் காணப்பட்ட பயனாளிக் குழுவிற்கு, இணையதளத்தில் தனிப்பட்ட விவசாயிக்கு சம்பந்தப்பட்ட நிறுவனம் வழங்கும் குறைந்த விற்பனை விலையைத் தெரிவிப்பதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை விலையில் பேச்சுவார்த்தை நடத்த வழிகாட்டலாம்.

14. வரைவோலையின் புகைப்பட நகலை வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற் பொறியாளர் (AE) அலுவலகத்தில் கொடுக்க வேண்டும்.

15. உதவி செயற் பொறியாளர்(AE) அவர்கள் இயந்திர சேவை மையம் அமைக்க அடையாளம் காணப்பட்ட பயனாளியால் வழங்கப்பட்ட விண்ணப்பம், குழு பதிவு செய்யப்பட்டதற்கான ஆதாரம், வரைவோலையின் நகல் ஆகியவற்றைச் சரிபார்த்த பிறகு, விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்(AE), வேளாண்மைப் பொறியியல் துறைக்கு பரிந்துரைக்க வேண்டும்.

16. செயற்பொறியாளர் (AE) சம்பந்தப்பட்ட முகவருக்கு பணி ஆணை வழங்க வேண்டும், நகலானது சம்மந்தப்பட்ட உதவிசெயற்பொறியாளர் (வே.பொ), சம்மந்தப்பட்ட வேளாண் உற்பத்தி நிறுவனங்கள்/விநியோகஸ்தர்கள் மற்றும் பயனாளி குழுக்களுக்கு வழங்க வேண்டும். முகவர் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை இயந்திர வாடகை மையத்திற்கு விநியோகம் செய்ய வேண்டும்.

17. அனைத்து வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை இயந்திர வாடகை மையங்களுக்கு முகவர் விநியோகம் செய்த பிறகு, உதவிப் பொறியாளர் (AE) / இளநிலை பொறியாளர் (AE) மற்றும் உதவி செயற் பொறியளர் (AE) ஆகியோர் அனைத்து வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை நேரடியாக பணி ஆணையுடன் ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டும். அனைத்து விலைப் பட்டியல்களிலும் குழுவின் அலுவலகப் பொறுப்பாளரின் கையொப்பம் பெறப்பட்டிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

18. உதவிப் பொறியாளர் (AE) / இளநிலை பொறியாளர் (AE) மற்றும் உதவி செயற் பொறியாளர் (AE) இயந்திரங்கள் மற்றும் கருவிகளில் பொறிக்கப்பட்ட இன்ஜின் எண்/சேஸிஸ் எண் மற்றும் வரிசை எண் மற்றும் நேர்முக சரிபார்ப்பின் போது டீலர்கள் விலைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளதையும் சரிபார்க்க வேண்டும். இவற்றில் ஏதேனும் வேறுபாடுகள் கண்டறியப்பட்டால் அது மானியத்திற்கு பரிந்துரைப்படக் கூடாது.

19. இயந்திரத்தின் மீது அவ்வியந்திரத்தின் அதிகபட்ச சில்லறை விலை (MRP) தெளிவாக குறிப்பிட்டிருப்பதை நேர்முக சரிபார்ப்பின் போது உறுதி செய்ய வேண்டும்.

(த.பி.பா)

20. மொத்த மானிய தொகையான ரூ.8 இலட்சத்தில், பொது பிரிவினராக இருந்தால் ரூ.2 இலட்சமும், பட்டியலின பிரிவினராக இருந்தால் ரூ.1 இலட்சமும் (SC/ST)"மானிய இருப்பு நிதிக்கணக்கில்" வரவு வைக்கப்பட்டு மீதமுள்ள மானிய தொகையை பயனாளி குழுவிற்கு வழங்க வேண்டும். மானிய இருப்பு நிதிக்கணக்கில் உள்ள தொகையினை இரண்டு ஆண்டு காலத்திற்கு திரும்ப பெற முடியாத காலக்கெடுவுடன் (Lock-in period) தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டும். வங்கிக் கடனில் கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் அமைக்கும் குழுவிற்கு மானியத் தொகை வழங்குவதற்கு முன் "மானிய இருப்பு நிதிக்கான" தொகையை, இரண்டு ஆண்டிற்கான நிலையான வைப்புத் தொகையாக முதலீடு செய்து, அதனை சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு அடமானம் செய்து கொடுக்க வேண்டும். மானியத் தொகையினை பயனாளி குழுவின் வங்கிக்கணக்கில் பின்னேற்பு மானியமாக வரவு வைக்கப்பட வேண்டும். மானியம் வைக்கப்படும் பயனாளிக்குழுவின் பொறுப்பாளர்கள் மானிய இருப்பு நிதியை ஏற்படுத்தவும், வங்கிக் கடன் மூலம் மையம் அமைக்கும் பட்சத்தில் நிலையான வைப்பு நிதியை சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர்களுக்கு அடமானம் செய்து கொடுக்கவும். பொறுப்பெடுத்து கொள்ள வேண்டும்.

21. மானியத் தொகையினை வழங்குவதற்கு முன், சம்மந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர்(வே.பொ), அக்குழுவிற்கு வழங்கப்பட்ட டிராக்டர் பதிவு செய்யப்பட்டுள்ளதையும், டிராக்டரின் இரண்டு நம்பர் பிளேட்களிலும் பதிவு எண் எழுதப்பட்டுள்ளதையும், பதிவுச்சான்றிதழில், வேளாண் மானியத்தில் பெறப்பட்டது என்றும், பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு மாற்ற முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளதையும் உறுதி செய்ய வேண்டும்.

22. கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் அமைத்துள்ள விவசாய குழுக்கள் / விவசாயிகள் சங்கம் (Farmers Club) / விவசாயிகள் குழு (Farmers Group) / விவசாயிகள் உற்பத்தியாளர் குழு (FPG) / விவசாயிகள் உற்பத்தியாளர்கள் அமைப்பு (FPO) / கூட்டுறவு சங்கங்கள் ஆகிய பதிவு செய்யப்பட்ட பயனாளி குழுக்களின் வங்கி கணக்கிற்கே நேரடியாக மானியத் தொகையை வரவு வைக்க வேண்டும். சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை வாடகை மையத்தில் உள்ள வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மறு சரிபார்த்த பின்னரே, மானியத் தொகையை பதிவு செய்யப்பட்ட பயனாளி குழுக்களின் வங்கிக்கணக்கிற்கு வரவு வைக்க வேண்டும்.

23. சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை மானிய இருப்பு நிதியினை, குறிப்பிட்ட இரண்டு வருட காலக்கெடுவிற்கு பிறகு, மையத்திலுள்ள வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மறு சரிபார்த்த பின்னரே, சம்மந்தப்பட்ட பயனாளி குழுவின் வங்கிக்கணக்கிற்கு வரவு வைக்க வேண்டும்.

24. வாடகை மையம் அமைத்த பின்னர், கண்காணிப்புப் பொறியாளர் எதேச்சையாக ஏதாவது ஒரு மையத்திலுள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இருப்பு, என்ஜின், சேஸ்சிஸ் எண் மற்றும் வரிசை எண் ஆகியவற்றை சரிபார்க்க வேண்டும்.

25. வாடகை மையங்களிலுள்ள பல்வேறு வேளாண் இயந்திரங்களை இயக்கும்போது ஏற்படும் விபத்துகளிலிருந்து விவசாயிகள் மற்றும் இயந்திரங்களை இயக்குபவர்களை காக்கும் வகையில், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கும் போதே "Pradhan Mantri Suraksha Bima Yojana" திட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் மூலம் ஒரு வருடத்திற்கு ரூ.12/- வீதம் செலுத்தி காப்பீடு பெற்றுக் கொள்ள அறிவுறுத்த வேண்டும். "Pradhan Mantri Suraksha Bima Yojana" திட்டத்தின் கீழ் விவசாயிகள் மற்றும் இயந்திரங்களை இயக்குபவர்களின் ஆயுள் காப்பீடு மற்றும் நிரந்தர ஊனம் (கை, கால் மற்றும் கண்) ஆகியவற்றிற்கு காப்பீட்டுத் தொகை பெற முடியும்.

26. இயந்திர வாடகை மையங்கள் அமைக்கும் விவசாயிகளின் கூட்டுறவு சங்கங்கள் / விவசாயிகள் சங்கம் / விவசாயிகள் குழு / உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் / உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் நீதித்துறை அல்லாத முத்திரைத்தாளில் (ரூ.30) பின் வருமாறு ஒப்பந்தம் அளிக்கப்பட வேண்டும்.

- வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் / கருவிகளை வாங்கிய நாளிலிருந்து குறைந்தது நான்கு ஆண்டுகளுக்கு விற்கமாட்டோம்.
- எதிர்காலத்தில் மானிய விலையில் பெறப்பட்ட இயந்திரங்கள் / கருவிகள் நான்கு ஆண்டுகளில் விற்கப்பட்டது தெரிய வந்தால் மானிய தொகை முழுவதும் மீள வழங்க ஒப்புக் கொள்கிறோம். மானியத்தின் மூலம் வாங்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் / கருவிகள் அந்த பகுதியில் உள்ள விவசாயிகளின் தேவைக்கேற்ப வாடகைக்கு வழங்க ஒப்புக் கொள்கிறோம்.

27. இயந்திர வாடகை மையங்கள் அமைந்துள்ள குழுவின் பொறுப்பாளரிடமிருந்து சம்மந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை பெறும் ஒப்பந்தத்தில், டிராக்டர் மற்றும் பவர் டில்லரின் என்ஜினில் பொறிக்கப்பட்ட என்ஜின் எண் மற்றும் சேசிஸ் எண் (Engine number & Chasis number) மற்றும் கருவிகளின் வரிசை எண் (Serial No.) ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்.

28. செயற்பொறியாளர்(வே.பொ) இயந்திர வாடகை மையங்கள் அமைக்கப்பட்டதற்கான முடிவு அறிக்கை மற்றும் ஒப்பந்தத்தின் நகலினை

(த.பி.பா)

சம்மந்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளர் (வே.பொ) அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

29. இயந்திர வாடகை மையம் அமைக்கும் குழுவிற்கு ஏற்கனவே சொந்தமாக இயந்திரங்கள் / உபகரணங்கள் இருப்பின் அதன் விவரம், பணி வழங்கல் ஆணை வழங்கும் முன்பே உறுதி செய்யப்பட வேண்டும். மேலும் அந்த இயந்திரங்கள் / கருவிகள் மையத்தில் உள்ள இயந்திரங்களுக்கான இருப்புப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

30. இயந்திர வாடகை மையம் அமையும் இடம், விவசாயிகள் எளிதில் அணுகக் கூடிய வகையில் இருக்க வேண்டும். விவசாயிகள் கூடும் இடங்களில், இயந்திர வாடகை மையத்தின் பெயர், இயந்திரங்களின் விவரம் மற்றும் வாடகை விவரம் ஆகியவை விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.

31. இயந்திரங்களை நிறுத்துவதற்கு தேவையான திறந்தவெளி கொட்டகையானது இயந்திர வாடகை மையத்தால் அமைக்கப்பட வேண்டும்.

32. இயந்திர வாடகை மையத்தில் வாங்கப்பட்ட இயந்திரங்கள், நிர்ணயிக்கப்பட்ட வாடகை கட்டணங்களில் தேவைப்படும் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் விவசாய பணிகள் மேற்கொள்ள வழங்கப்பட வேண்டும்.

33. இயந்திர வாடகை மையத்தால் நிர்ணயிக்கப்பட்ட வாடகைக் கட்டணம், உள்ளூர் சந்தை விகிதங்களைக் காட்டிலும் குறைவாக இருக்க வேண்டும். இயந்திர வாடகை மையத்தால் அதிக வாடகை கட்டணங்கள் நிர்ணயம் செய்வதைக் கண்டறிந்தால், மாவட்ட அளவிலான நிர்வாகக் குழு தலையிட்டு, நியாயமான வாடகைக் கட்டணங்களை நிர்ணயம் செய்யும். வாடகைக் கட்டணங்களை நிர்ணயம் செய்யும்போது போக்குவரத்துக் கட்டணங்கள், பராமரிப்பு மற்றும் உதிரி பாகங்கள் மாற்றுதல், எரிபொருள், எண்ணெய், மசகு எண்ணெய், ஆபரேட்டரின் சம்பளம், காப்பீட்டு பிரீமியம், மூலதனத்தின் மீதான வட்டி போன்றவை கருத்தில் கொள்ள வேண்டும்.

34. இயந்திர வாடகை மையங்களில் வாங்கப்பட்ட இயந்திரங்கள் / கருவிகள் 200 கி.மீ தூரத்தில் மாவட்டத்திற்குள் பணி செய்ய அந்தந்த உதவி செயற்பொறியாளரிடம் ஒப்புதல் பெற வேண்டும். 200 கி.மீ தூரத்திற்கு அதிகமாக உள்ள இடங்கள் மற்றும் மாவட்டத்திற்கு வெளியே சென்று பணி செய்ய உரிய உதவி செயற்பொறியாளரிடம் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் சென்று பணிபுரியும் காலம் மூன்று மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். மேலும் இயந்திரங்கள் / கருவிகள் மூன்று மாத காலத்திற்குள் உரிய இயந்திர வாடகை சேவை மையத்தால் மீட்கப்பட வேண்டும். மேற்கண்டவாறு இயந்திர வாடகை சேவை மையக்குழுவிடம் ஒப்பந்தம் பெறப்பட வேண்டும்.

35. விவசாயிகளின் கூட்டுறவு சங்கங்கள் / விவசாயிகள் சங்கம் / விவசாயிகள் குழு / உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் / உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் அமைத்துள்ள வாடகை மையத்திலுள்ள ஒவ்வொரு இயந்திரம் மற்றும் கருவியின் விவரம், இருப்பு பதிவேட்டில் (Stock Register) பதிவு செய்யப்பட்டு

அக்குழுவில் உள்ளவர்கள் மற்றும் நிறுவனத்தை சார்ந்த நபர் இருவரும் இருப்புப்பதிவேட்டில் கையொப்பம் இடப்பட்டு இருக்க வேண்டும். மேலும், வாடகை மையத்திலுள்ள ஒவ்வொரு இயந்திரம் மற்றும் கருவியுடன் அக்குழுவின் நிறுவனர், நிறுவனத்தை சார்ந்த நபர் மற்றும் சம்மந்தப்பட்ட உதவிப்பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் ஆகியோருடன் கூடிய புகைப்படம் மற்றும் ஒப்பந்த நகலும் இயந்திர இருப்புப்பதிவேட்டில் ஒட்டப்பட்டு இருக்க வேண்டும். ஒவ்வொரு இயந்திர வாடகை மையத்திலும், வாடகைப்பதிவேடு (Hiring Register), கணக்கு பதிவேடு (Account Register) மற்றும் அதிகாரிகள் வருகை பதிவேடு (Officers Visit Register) ஆகியவை பராமரிக்கப்பட வேண்டும்.

36. ஒவ்வொரு உபகோட்டத்திலும், இயந்திர வாடகை மையத்தில் உள்ள வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இருப்பு விவரம், இருப்பு பதிவேட்டில் பராமரிக்கப்பட வேண்டும்.

37. வேளாண் இயந்திரங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளை இயந்திர வாடகை மையத்தால், உற்பத்தியாளர் மற்றும் விநியோகஸ்தர்களின் உதவியுடன் செயல்படுத்த வேண்டும்.

38. வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பாதுகாப்பானது, இயந்திர வாடகை மையத்தால் உறுதி செய்யப்பட வேண்டும்.

39. இயந்திர வாடகை மையத்தின் விவரங்கள், விளம்பரம் மற்றும் விழிப்புணர்வுக்காக உழவன் செயலியில் சேர்க்கப்பட வேண்டும்.

**viii. தோட்டக்கலை பயிர் இடுபொருட்கள் மற்றும் நாற்றுகள் வழங்குவதற்கான வழிமுறைகள்**

1. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மூலம் 2022-23 ஆம் ஆண்டில் **முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தின் கீழ்** உள்ள விவசாயிகளுக்கு, காய்கறி விதைகள் மற்றும் நாற்றுக்கள், பழ மரக்கன்றுகள் போன்ற இடுபொருட்கள் விநியோகிக்கப்பட வேண்டும்.
2. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் பட்டியலை பருவமழைக்கு முன்னதாக தோட்டக்கலைத் துறை அலுவலரிடம் வழங்க வேண்டும்.
3. தோட்டக்கலை இடுபொருட்களை உரிய நேரத்தில் வழங்குவதை தொகுப்பு மேம்பாட்டு குழு (CDT) உறுதி செய்ய வேண்டும்.

**திட்டத்தை கண்காணித்தல்**

1. முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் பயனாளிகள் விவரங்களை இணையதளத்தில் AGRISNET- ARS Portal மூலம் பதிவு செய்ய வேண்டும்.

(த.பி.பா)

2. இடுபொருட்கள் மானியம் பெறுவதற்கான பயனாளிகளின் சான்றிதழ்கள்/நில விவரங்கள்/விண்ணப்பங்கள் உதவி வேளாண்மை அலுவலரால் பரிந்துரைக்கப்பட்டு, வேளாண் அலுவலர்/ உதவி வேளாண்மை இயக்குநரால் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.
3. விரிவான இடுபொருட்கள் வழங்கல் மேலாண்மை அமைப்பு (Comprehensive Input Supply Management System) மூலம் இடுபொருட்கள் விநியோகத்தை நிகழ்நேர அடிப்படையில் (Realtime basis) கண்காணிக்கும் வகையில், மூத்த அதிகாரிகளின் கண்காணிப்புக்கு (Mobile Dashboard) பயன்படுத்தப்படும்.
4. பதிவு விவரங்கள் பின்வருமாறு:
   i. பெயர், முகவரி, புகைப்படம், ஆதார் எண், மொபைல் எண் போன்றவை,
   ii. சாகுபடி செய்யும் பரப்பு :
   iii. சாகுபடி செய்யும் பயிர் :
   iv. நிலத்தின் புல எண்(Survey No.) :
5. விவசாயிகள் குழு / விவசாயி உற்பத்தியாளர் அமைப்பும் (FPO) இத்திட்டத்தின் பலனைப் பெறலாம். ஆனால், தனிப்பட்ட விவசாயிக்கு பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் விதிகளின்படி மானியம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.
19/10/22